Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# இசையும் நாடகமும்

**ஜீவந்தனி லம்போதரன்**
**விரிவுரையாளர் இசைத்துறை**
**சேர். பொன். இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
Jeevanthisimbu@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

பல வகை இசை வடிவங்களைக் கொண்டு ஒரு கதையை விளக்க அமைக்கப்பட்டுள்ள நாடகங்களுக்கு இசை நாடகங்கள் என்று பெயர். தரு, சிந்து, லாவணி, சவாயி, கட்கா, ஓடம், சூர்ணிகை, விருத்தம், பத்யம், சுலோகம், கிருதி, கீர்த்தனை, தண்டகம், ஆனந்தக் களிப்பு, இரு சொல் அலங்காரம், நாமாவளி, கண்ணி, கும்மி, ஓரடிக் கீர்த்தனை, ஓரடித் தரு, ஓரடிப்பதம் போன்ற பல்வேறு இசை வடிவங்கள் இசை நாடகங்களில் கையாளப்படுகின்றன. வேகமாகப் பாடும் இசை, பல வித உணர்ச்சிகளை (ரசங்களை)க் காட்டுகின்ற இசை, தனிநபர் பாடும் இசை, குழவினர் பாடும் இசை, வார்த்தை இல்லாத இசை இவ்வாறு பல வகைகளை நாம் இசை நாடகத்தில் காண முடியும்.

பண்டைத்தமிழர் இசைக் கலையையும், கூத்துக் கலையையும் வாழ்வியலோடு ஒன்றியனவாகவே வளர்த்துள்ளனர். உயிரில்லாமல் உடம்பு இயங்காததைப் போன்று இசை இல்லாமல் கூத்தோ, நாடகமோ நிகழாது என்ற அளவில் இசைக் கலையின் சிறப்பு அக்காலத்தில் இருந்துள்ளது. சங்கீதம் இல்லாத நாடகம் சந்திரன் இல்லாத வானம் என்ற நிலையே இருந்தது.

நாடகங்கள் கூத்துக்களின் வளர்ச்சியாகவே இருந்துள்ளன. தமிழர்களின் வாழ்வோடு இன்பத்திலும், துன்பத்திலும் நீக்கமற நிறைந்துள்ள இசையும், நாடகமும் மக்களை எப்படிக் கவர்ந்துள்ளன என்பதை இசையும் நாடகமும் என்ற தலைப்பினூடாக அறிய முடிகின்றது.கலை என்பது மனித மனத்தின் ஆழ்ந்த அனுபவ வெளிப்பாடாகும். மனித மனத்தில் ஆழத்தில் புதைந்து கிடக்கும் தன்மைகளை, தத்துவங்களை முருகியலை நெறிப்படுத்துவதே கலையின் இயல்பு என்று குறிப்பிடும் ஆறு அழகப்பன் இலக்கியம், கலை என்ற இரண்டிலும் இணைந்த ஓர் அற்புதமான படைப்பு நாடகக் கலை என்று குறிப்பிடுவார். இத்தகைய அற்புதமான கலைப் படைப்பாக விளங்கும் நாடகக் கலை குறித்த பல்வேறு செய்திகள் இலக்கியங்களில் காணக் கிடைக்கின்றன. சங்க காலம் முதற் கொண்டு அறியலாகும் தமிழ் நாடக வடிவங்கள் யாவும் கூத்து ஆட்டம் என்ற நிலையில் அமைந்துள்ளன. நாடகம் என்பது கதை தழுவிய ஆடல் - பாடல் உடையது. பல நாள் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய செய்தியை ஒரு நாள் நாடகத்தின் மூலம் அறிந்து கொள்ள முடியும். நாடகம் கலைக்கும், நாட்டின் நாகரிகத்திற்கும் கண்ணாடி. உணர்ச்சியைத் தூண்டி விட்டு உள்ளத்தில் புதைந்து கிடக்கும் அன்பையும், தூய்மையையும் வெளிப்படுத்தும் மக்களைப் பயன்படுத்தும் மகத்தான கலை என்கிறார் ஔவை. க.சண்முகம். மக்களை உடனடியாகச் செயலில் இறங்கச் செய்வது நாடகம் தான் என்கிறார் கலைவாணர்.ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு படைத்த மனிதன் வரை இசைக்கு மயங்காத உயிரினங்களே இல்லை என்று சொல்லுமளவிற்கு உணர்வுகளைத் தட்டி எழுப்பும் ஆற்றல் கொண்ட இசையும் நாடகமும் இணைந்து எத்துணை சிறப்புக்களைக் கொண்டு மக்களை எப்படி கவர்ந்தன என்பதனையும் வாழ்க்கையில் அவர்களுக்குள்ள ஈடுபாட்டையும் கூறுவதாக இசையும் நாடகமும் என்கின்ற கட்டுரை அமைகின்றது.

**திறவுச் சொற்கள்**:இசை,நாடகம்,கூத்து,கலை,நடித்தல்,பாடல்,ஆடல்,ஆட்டம், இசை நாடகம்

**முன்னுரை**

அகிலமெல்லாம் அசைந்து கொண்டேயிருக்கிறது. அண்ட கோளங்கள் எல்லாம் ஓய்வின்றிச் சுழன்று கொண்டே இருக்கின்றன. காண்கின்ற காட்சி எல்லாம் கலை வடிவாகவே தோற்றமளிக்கின்றன. எல்லையற்ற காந்த சக்தி! எழில் மிகுந்த கவர்ச்சிக் கடல்! இணையில்லாத வேகம்! எதிரில்லாத ஆற்றல்! ஈடில்லாத அழகு! எங்கு நோக்கினும் புதுமை! பொங்கி எழும் பூரிப்பு! சுற்றும் சுடர் வண்ணங்கள்! சூழ்ந்திருக்கும் வானகமும் சொக்கிளமை வையகமும், சூரியனும் சந்திரனும் எல்லாமே அசையும் அழகோவியங்கள்! அறிவுக்கு அறிவாக, அழகுக்கு அழகாக, ஒளியின் ஒளியாக, ஓசையின் அலையாக உயர்ந்து விளங்கும் கருப் பொருள்கள்! யாவும் உயிரினத்தின் முழுமுதற் காரணங்கள்! அகிலத்தை ஆட்டிப் படைக்கும் ஆதி சக்தியின் அடிப்படைகள்!. இவ்வாறு பிரபஞ்சத்தின் ஒவ்வோர் அசைவும் தாளம் தவறாமல் கலை அழகோடு இயங்கிக் கொண்டிருக்கிறது.

முத்தமிழின் கூறுகள் என்று கருதப்படும் இயல், இசை, நாடகம், ஆகியன ஒன்றை ஒன்று பிரிக்க முடியாமல் தமக்குத் தாமே வசப்படுத்திக் கொள்ளும் தன்மை கொண்டவனவாக விளங்குகின்றன. எனவே தான் தமிழகக் கலைகளான இசை, நாடகம், சிற்பம், கட்டிடம், ஓவியம் முதலிய கலைகளில் இசை , நாடகம், நாட்டியம் ஆகியன கண்ணுக்கும் காதுக்கும் விருந்து பயக்கின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த இசையும், நாடகமும் தமிழன் தம் வாழ்க்கையில் எப்படி சிறப்புற்றிருந்தன என்பதைச் சங்க இலக்கியங்கள் சுட்டி நிற்கின்றன.

இன்பத் தமிழ் மொழி இயல், இசை, நாடகம் எனப் பிரிந்தும் இணைந்தும் வளர்ந்து வரும் சிறப்பினைக் கொண்டது. தொல்காப்பியத்திற்கு முந்திய அகத்தியம் முத்தமிழுக்கும் இலக்கணம் கூறும் நூல் என்று உரையாசிரியர் கூறுவர். இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் மூன்று தமிழும் விரவி வருதலின் முத்தமிழ்க் காப்பியம் எனப் பாராட்டப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்களிலும் 'முத்தமிழ்' என்ற வழக்கு இடம் பெற்றுள்ளது. 'சங்கத் தமிழ் மூன்றும் தா' என வேண்டுகின்றார் ஔவையார். காலத்தால் முந்தி கருத்தால் சிறந்து விளங்கும் முத்தமிழுள் ஒன்று நாடகம் இது இயலையும், இசையையும் தன்பால் ஈர்த்துக் கொண்டு கற்றோரும், மற்றோருக்கும் கண்டும், கேட்டும் மகிழச் செய்ய வல்லது.

**இசையின் சிறப்பு**

இசை என்ற சொல்லிற்கு இசைவிப்பது, வசப்படுத்துவது என்று பொருள். கவிஞர்களின் எண்ணங்களோடும் கலைஞர்களின் வெளிப்பாட்டோடும் இசைந்து போவதாலே இஃது இசையாகும் என்று அடியார்க்கு நல்லார் கூறுகின்றார். கேட்பவர்களை இசைய வைப்பது இசையாகும். ஓரறிவு உயிரி முதல் ஆறறிவு படைத்த மனிதன் வரை இசைக்கு மயங்காத உயிரினங்களே இல்லையென்று சொல்லுமளவிற்கு உணர்வுகளைத் தட்டி எழுப்பும் ஆற்றல் இசைக்கு உள்ளது. மனிதனுடைய இன்ப துன்பங்களில் இசை நீங்காத இடம் வகிக்கின்றது.

தமிழரிடையே இசையின் முக்கியத்துவத்தைப் பற்றி அறிவதற்குத் தொல்காப்பியமும் அதற்குப் பிற்பட்ட காலத்தில் தோன்றிய சிலப்பதிகாரமும் உதவுகின்றன. பண்டைத் தமிழர் இசைக் கலையையும், கூத்துக் கலையையும் வாழ்வியலோடு ஒன்றியனவாகவே வளர்ந்துள்ளனர். உயிரில்லாமல் உடம்பு இயங்காததைப் போன்று இசைக் கலையின் சிறப்பு இக்காலத்தில் இருந்துள்ளது. சங்கீதமும் இல்லாத நாடகம் சந்திரன் இல்லாத வானம் என்ற நிலையே இருந்தது.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**நாடக சிறப்பு**

சங்க காலம் முதற் கொண்டு அறியலாகும் தமிழ் நாடக வடிவங்கள் யாவும் கூத்து, ஆட்டம் என்ற நிலையில் அமைந்துள்ளன. நாடகம் என்பது கதை தழுவிய ஆடல் - பாடல் உடையது. பல நாள் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய செய்தியை ஒரு நாள் நாடகத்தின் மூலம் அறிந்து கொள்ள முடியும் என்கிறார் கிருபானந்த வாரியார் நாடகம் கலைக்கும், நாட்டின் நாகரிகத்திற்கும் கண்ணாடி. உணர்ச்சியைத் தூண்டி விட்டு உள்ளத்தில் புதைந்து கிடக்கும் அன்பையும் தூய்மையையும் வெளிப்படுத்தும் மக்களால் பண்படுத்தும் மகத்தான கலை என்கிறார் ஔவை க.சண்முகம். மக்களை உடனடியாகச் செயலில் இறங்கச் செய்வது நாடகம் தான் என்கிறார் கலை வாணர்.

இசை இரண்டு வகைப்படும் ஒன்று மனிதன் வாயால் வெளியிடும் குரலிசை. மற்றொன்று கருவியிசை ஆகும். இசைக் கருவிகளின் இசை ஒலிக்கு ஏற்ப கை கால்களை அசைவுகளுடன் ஆடச் செய்வது கூத்து எனப்பட்டது. நாட்டியம் என்பது அபிநயம் காட்டிப் பாடல் கருத்து காண்பவர் மனதில் பதியுமாறு ஆடும் கூத்து ஆகும். இதிகாச புராணங்கள் தொடர்பான நிகழ்ச்சிகளையோ, கதையாகத் தழுவி இயல், இசை, கூத்து மூன்றும் பொருந்திய நடிப்புத்திறனால் வேடம் புனைந்து ஆடுவது அக்கால நாடகத்திறனாகும்.

நாடகங்கள் கூத்துக்களின் வளர்ச்சியாகவே இருந்துள்ளன. அதனை “நாடக மேத்தும் நாடகக் கணிகை” என்று சிலப்பதிகாரம் மாதவியைக் குறிப்பிடுவதால் அறிய முடிகின்றது. இன்றும் கிராமப் பகுதியில் வாழ்கின்ற பாமரமக்கள் நாடகம் ஆடினார்கள் என்று கூறும் வழக்கம் இதற்குச் சான்றாகும்.

நாடகங்களில் பாடப் பெறும் பாடல்கள் தரு, பதம், பத்தியம், கீதம், கைவாரம், பணிப்பு, தண்டகம், சூர்ணிகை, திவிபதை, கண்ணிகள், எச்சரிக்கைத் தரு, முதலியன ஏற்புடைய இராகங்களால் அமைக்கப்பட்ட பாடல்களாகவே இருப்பது கலையமைப்பாகும்.

நாடகக் கலையில் ஆடல், பாடல்,உரையாடல், நடித்தல் என்ற வகைத் திறங்கள் அங்கங்களாக இருந்தன. மானுட மனக் கிளர்ச்சிகளை வேடத்திற்கும், கதையின் நிகழ்ச்சி கட்டும் ஏற்ப நடித்தும் பாடியும், பாடிக் கொண்டே நடித்தும் நாடகத் திறன் வளர்த்துள்ளது. அதற்குரியதாக நாடக ஆசிரியர்களும், கவிகளும் இசைப் பாடல்களை உருவாக்கி நாடகங்களில் இடம் பெறச் செய்துள்ளனர். கதை அமைப்பிற்கேற்ப வேடமிட்டுக் கொண்ட நடிகர்கள் சிரிப்பு, அழுகை, சினம், வெற்றி போன்ற நிகழ்ச்சிகளைப் பாடல்களாகவே பாடி நடித்து மக்களைக் கவர்ந்துள்ளனர்.

இசைப் பாடல்களாக இலக்கண அமைதியுடன் செய்யப்பட்டு நாடகங்களில் இடம் பெற்ற பாடல்கள் வெண்பா, அகவல், கலிப்பா, கலித்துறை, தாழிசை ஆகியனவாகும். அவற்றிற்கமைந்த இராகங்களை முறையே சங்கராபரணம், தோடி, பந்துவராளி, பைரவி, தோடி அல்லது கல்யாணி என்ற வகையில் அமைந்துள்ளனர்.

**நடிப்பும் - இசையும்**

இரு வகைக் கூத்து என்பது அகக் கூத்து, புறக் கூத்து ஆகும். அரசருக்காடும் வேத்தியலை அகக் கூத்தென்றும், பிறருக்காடும் பொதுவியலை புறக் கூத்து என்றும் அழைத்தனர். நாடகம் - நாட்டியம் என்ற இரண்டும் ‘கூத்து’ என்ற பொதுப் பெயராலேயே அழைக்கப்பட்டன. அகக் கூத்து இரு வகைப்படும் அவை சாந்திக் கூத்து, வினோதக் கூத்து ஆகும்.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**நாடகத்தில் பாடும் பாடகன்**

சிலப்பதிகாரக் கதை நடந்த காலத்தில் தனித் தமிழ் இசை வழங்கி வந்தது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. யாழ், குழல், தாளம், சீர், வாயப்பாட்டு, மெல்லிய குரலுடன் அமைப்பாக வாசிக்கும் மத்தளம், முன்னே சொன்ன கூத்தின் வகை இவற்றுடன் இசைந்த பாடலை இனிமையாக தாளக் கட்டுடன் பொருந்தப் பாட வேண்டும்.

வரிப்பாட்டிற்கும் ஆடலுக்கும் உரிய பொருளை விளக்கி இயற் சொல், திசைச் சொல், வேற்றுச் சொற்களின் ஒசைகளைச் சுத்தமாகக் கடைப்பிடித்து அந்த ஒசையின் இலக்கணங்களை எல்லாம் குற்றமறத் தெரிந்த அறிவாளியாகப் பாடகன் இருக்க வேண்டும். அப்பாடகன் பாடலாசிரியரின் மனக்குறிப்பு, கருத்து ஆகியவற்றை உணர்ந்து பாட வேண்டும். ஆடலின் தொகுதியறிந்து இன்ன பகுதிக்கு இந்தப் பாடல் பொருந்தும் என்றறிந்து பாட வேண்டும்.

**வரலாற்றில் தமிழ் நாடகம்**

மன மகிழ்ச்சிக்காக ஆடப்பட்ட ஆட்டங்களே நாடகக் கலையின் தொடக்கமாகும். மன மகிழ்ச்சிக்காக ஆடப்பட்ட ஆட்டம் சடங்கு முறை ஆட்டமாக பரிணமித்துக் கூத்தாக உருவெடுத்து நாடகமாகத் தோற்றம் கொண்டிருக்க வேண்டும். அதனை ஆட்டம் - சடங்கு முறை - ஆட்டம் - கூத்து - நாடகம் என்றவாறு வாய்ப்பாட்டில் குறிப்பிடக் காணலாம்.

நாடகம் என்பது எல்லா நாட்டிலும் ஒரு தெய்வத் தொடர்புடைய இலக்கியமாகவே கருதப்படுகிறது என்னும் கூற்றினைக் கொண்டு உலகில் நாடகத் தோற்றம்; என்பது சமயத்தின் அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றது எனலாம். தமிழில் வழக்கில் இருந்து வரும் துதிப்பாடல்களே தமிழ் நாடகத்திற்குத் தோற்றுவாய் செய்தன என்பர். இவ்வாறு சமயத்தின் அடிப்படையில் தோன்றி வளர்ந்ததாக கொள்ளப்படும் தமிழ் நாடகம் தன் வளர்ச்சிப் போக்கின் ஒரு கட்டத்தில் நாட்டில் நிலவிய அரசியல் குழப்பம், வேற்று நாட்டவரின் அதிகார ஆதிக்கம் காரணமாகத் தேக்கம் அடைந்த நிலையில் தமிழ் மாந்தர்களை வைத்து நாடகங்கள் எழுதப்பட வேண்டும் என்ற எண்ணத் தூண்டுதலால் தமிழில் பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம், பாகவத மேள நாடகம், நாட்டிய நாடகம், குளுவ நாடகம், மகுடி நாடகம், இசை நாடகமாக இனங்கள் தோன்றின.

பல வகையான இசை வடிவங்களைக் கொண்டு ஒரு கதையை விளக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள நாடகத்திற்கு 'இநை நாடகம்' என்று பெயர் இதை ஆங்கிலத்தில் 'ஆபரா' என்றும் வட மொழியில் 'கேய நாடகம்' என்றும் அழைக்கின்றனர். இதில் தரு, சிந்து, கண்ணி, கும்மி, இலாவணி, ஆனந்தக் களிப்பு, சவாயி, கட்கா, ஓடம், சூர்ணிகை, விருத்தம், பத்யம், சுலோகம், கிருதி, கீர்த்தனை, தாண்டகம், இரு சொல் அலங்காரம், நாமாவளி, ஓரடிக் கீர்த்தனை, ஓரடி தரு, ஓரடி பதம் போன்ற பல்வேறு இசை வடிவங்கள் இந்த இசை நாடகத்தில் கையாளப்படுகின்றன.

மேலும் வேகமாகப் பாடப்படும் இசை, மெதுவாகப் பாடப்படும் இசை, நடுத்தரமாகப் பாடப்படும் இசை, பலவிதமான உணர்ச்சிகளையும், நவரசங்களையும் காட்டுகின்ற இசை என்ற பல வகைகளையும் நாம் இந்த இசை நாடகத்தில் காண முடிகின்றது. மற்றும் தனி நபர் பாடும் இசை என்றும், குழுவினர் பாடும் இசை என்றும் வார்த்தை இல்லாத குழு இசை என்றும் பல வகைகளை நாம் இதில் காண முடிகின்றது.

இவ்வகையில் அருணாச்சலக் கவிராயரின் 'இராம நாடகம்' கோபால கிருஸ்ண பாரதியாரின் 'நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளும்' தமிழில் சிறந்த இசை நாடகங்களாக உள்ளன.

சாஜிமகாராஜாவின் பல்லக்குசேவா பிரபந்தமும் தியாகராஜாவின் நெனகா சரித்திரமும், பிரகலாத பக்தி விஜயமும் தெலுங்கில் சிறந்த இசை நாடகங்களாக உள்ளன. ஜெயகோவிந்தரின் 'கீத கோவிந்தமும்' (அ~;டபதி) நாராயண தீர்த்தரின் கிருஸ்ண லீலா தரங்கிணியும் வட மொழியில் சிறந்த இசை நாடகங்களாக உள்ளன.

மேற் கண்ட இசை நாடகங்களில் சாகித்திய பாவமும், இராக பாவமும், இரச பாவமும், கதை அமைப்பும் மிகவும் சிறப்பாக இருந்ததின் காரணமாக பிற்காலத்தில் இவற்றை நாட்டிய நாடகமாக அபிநயம் பிடித்து ஆடத்துவங்கி விட்டனர்.

**தொல்காப்பியர் காலம்**

எதைப்பற்றி அறியப் புகினும் தொல்காப்பியம் தொடங்கி அறியத் தொடங்குதலே இன்றும் தமிழ் மரபாக உள்ளது. அந்த வகையில் தமிழ் நாடகம் குறித்த வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்துக் காணும் முயற்சியும் தொல்காப்பியம் தொடங்கி மேற்கொள்ளப்படுகிறது. காலத்தால் முற்பட்டதாகக் கொள்ளப்படும் இலக்கண நூலாம் தொல்காப்பியத்தில் நாடகம் என்னும் சொல் வழங்கி வந்துள்ளமையினை

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்

பாடல் சான்ற புலநெறி வழக்கம்" (அகம் 53) என்னும் நூற்பா வழி அறியலாம்.

தமிழில் நடிப்பதற்காக மட்டுமே நாடகங்கள் இயற்றப் பெற்றன. நாடகம் எனும் கலை கண்ணால் கண்டும், செவியால் கேட்டும், உள்ளதால் துய்த்தும், இன்புறுதற்குரியதாகும். இயற்றமிழைப் படித்தும், கேட்டும் பொருளின்பத்தை நுகர்கிறோம். இசைத் தமிழில் பொருளுணர்வோடு இசையின்பத்தை செவிகளால் மாந்தி மகிழ்கின்றோம். நாடகத் தமிழில் இந்த இரண்டுடன் நடிப்பவரின் விறலையும், காட்சி எழிலையும் கண்களால் கண்டும் களிக்கின்றோம். இவ்வாறு இரு புலனும் ஒரு சேர ஈடுபடுவதால் நாடகத் தமிழ் எளிதில் பொருள் விளங்குவதாக இருத்தல் வேண்டுமென ஆன்றோர் கூறுகின்றனர்.

**நாடகத்தின் வாழ்வும் தாழ்வும்**

கடைச் சங்க காலம் வரை எழிலோடும், பொலிவோடும் விளங்கிய நாடகக் கலை கி.பி மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி ஒன்பதாம் நூற்றாண்டு வரை புதிய பரிமாணங்கள் எதனையும் தன்னுள் வாங்கி உயராது நாடகக் கலை வாழ்ந்து கொண்டிருக்கிறது என்ற நிலையிலேயே இருந்தது.

தமிழ் நாடகம் தோன்றிய காலம் பற்றி தெளிவாக அறியப்படவில்லை. அதன் வளர்ச்சி பற்றிய செய்திகள் அறியப்படுகின்றன. சமயத் தொடர்பாக நிகழ்த்தப்பட்ட ஆடல் பாடல்களே நாடகத்தின் அடிப்படைகள் ஆகும். அவை காலப்போக்கில் கதை தழுவிய கூத்தாக இருந்து பின் முழுமையான நாடகமாக மலர்ந்தன. தமிழை "இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ்" என்று மூன்று வகையாக பகுத்திருக்கின்றனர். இசைத்தமிழ் என்பது இசைக்குரிய இலக்கணங்களும், உருப்படிகளும் ஆகும். நாடகத் தமிழ் கதை தழுவி வரும் கூத்தென்றும் அஃதல்லாதன என்றும் இருவகைப்படும்.

நாடகம் பல உறுப்புகளை கொண்டது. கதை, பாத்திரப் படைப்பு, காட்சித் தொகுப்பு, உரையாடல், நடிப்பு பாடல், வேடப் பொருத்தம் காட்சி, கோடனை, நாடக அரங்கம், நாடக இரசிகர்கள் இவ்வாறு பல்வேறு பிரிவுகளைக் கொண்ட நாடகத்தில் நடிப்பு ஒரு சிறப்பும் முதன்மையான பகுதி. அதைவிட சிறப்பு நாடக அமைப்பாகும். நடிப்புக்கலை இயற்கையாக எல்லோரிடமும் அமைந்தது. அவை எழுத்தில் வடிப்பது எல்லோராலும் இயலா ஒன்று. நாடகம் வாழ்க்கைக்கு பயன் தரும் ஒன்றாக அமைய வேண்டும். நாடகம் ஒரு மகத்தான சக்தி அறிவையும், உள்ளுணர்ச்சியையும் கிளறி விடக்கூடிய சக்தி. கண், காது, மனம் மூன்றையும் தன் பால் இழுத்து வைத்துக் கொள்ளும் ஒரு அற்புதக்கலை.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

இக்காலத்தில் மேடை நாடகங்கள் குறைந்து வருகின்றன. காரணம் தொலைக்காட்சியின் தாக்கம் தான். இருப்பினும் சில இடங்களில் நாடகம் மேடைகளில் அரங்கேற்றம் பெற்றுக் கொண்டு வருகின்றன. நாடகங்களில் குறைந்து வரும் இந்நாளில் நாடக நூல்கள் வெளிவந்து நாடக ரசிகர்களை இன்புறச் செய்கிறது.

நாட்டிய நாடகங்களிலும், குறவஞ்சி நாடகங்களிலும் முதல் பாடலாகும் கடவுள் வாழ்த்து "நாட்டை" இராகத்தில் பாடப் பெற்றுள்ளது. இந் நாடகங்களில் கட்டியக்காரன் வருகை முதல் காட்சியாகும். அக்காலத்தில் பாடிக் கொண்டு ஆடுவதும், பாடிக் கொண்டே நடிப்பதும் நாடகக் கலைத்திறமாதலின் கட்டியக்காரன் தனது வருகைப் பாடலை "பரசு" அல்லது "நாதநாமக்கிரியை" இராகத்தில் ஆதி தாளத்தில் பாடி வருவது வழக்கமாக இருந்தது.

நாடகத்தில் நடிகர் தாம் கொண்ட வேடத்தையும் அதன் சிறப்பு இயல்புகளையும் விளக்கம் செய்யும் முகத்தான் பாடிவரும் பாட்டு "ஆகிரி" அல்லது இராகமாகவே இருந்துள்ளது. தலைமையான வேடம் தாங்கும் அரசன் அரசி போன்ற வேடம் புனைந்தோர் வருகைக்குரிய பாடல் பெரும்பான்மையும் "சௌராஸ்டிரம்" என்னும் இராகத்தில் மிஸ்ர தாளத்தில் பாடப்பட்டுள்ளது. மிஸ்ர நடை போட்டு பெருமிதமாகவும், மென்மையாகவும் நடிகர்கள் வருவதற்கு ஏற்புடைய தாளமாகும். வீரன், அரசன் வருகைக்கு "அடாணா இராகம்" சாபு தாளத்தில் பாடப் பெறுகிறது.

இவற்றைப் போன்றே நாடக மாந்தர்களின் செயல்களுக்கும், நிகழ்ச்சி கட்டுக்கும் பொருந்தியனவாகப் பாடப்பட்ட நாடகப் பாடல் கட்டி ஏற்புடைய கவர்ச்சியான இராகங்கள் அமைக்கப்பட்டு, நடிகர்கள் தங்கள் குரல் வளத்தாலும் இசை வன்மையாலும் பாடி மக்கள் உள்ளத்தை கவர்ந்துள்ளனர். ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்றாற் போல் பாடல்களைப் பாடி நடிக்கின்றார்கள். ஆசை, காமம், களியாட்டிற்கு மோகனமும், ஆனந்த பைரவியும், மகிழ்ச்சிக்கு கல்யாணியும் மோகனமும், முறையிடலுக்குப் பிலஹரியும் நாதநாமக் கிரியையும், வெறுப்புக்குக் காம்போதியும், புலம்பலுக்கு முகாரியும் சங்கராபரணமும், தூது விடலுக்கு கல்யாணியும் காம்போதியும், அதிகாரத்திற்கும் ஆணவத்திற்கும் அடாணாவும், உரையாடலுக்கு எதுகுல காம்போதியும், பாராட்டுக்குத் தர்பாரும், விசாரணைக்கும் எதிர் வாதத்திற்கும் தன்யாசியும், பெருமைக்கு சாவேரியும், தாலாட்டிற்கும் பக்திக்கும் நீலாம்பரியும், நீதி, வறுமை துறவு ஆகியவற்றிற்குப் புன்னாக வராளியும் பொருத்தமான இராகங்களாக அமைந்துள்ளன.

தமிழர்களின் வாழ்வோடு இன்பத்திலும் துன்பத்திலும் நீக்கமத நிறைந்துள்ள இசையும் நாடகமும் மக்களை எப்படிக் கவர்ந்தன, எவ்வாறு ஒன்றிணைந்து காணப்பட்டன என்பதையும் வாழ்க்கையில் உள்ள ஈடுபாட்டினையும் மேலே கண்ட விளக்கங்களை, சான்றுகளை ஆராய்ந்த வகையிலும், நாடகங்களைப் பார்த்த வகையிலும் இசையின்றி நாடகங்கள் அமையாது என்பதனை வலியுறுத்திச் சொல்ல முடியும்.

**உசாத்துணை நூல்கள்**

1. தமிழக இசையும் ஆய்வும் - முனைவர் இ.அங்கயற் கண்ணி.
2. இந்திய கலைச் செல்வம் - கலைஞன் பதிப்பகம் சென்னை. 1970
3. சங்க இலக்கியத்தில் கலையும் கலைக் கோட்பாடும் - முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன், உலகத் தமிழ் ஆராய்சி நிறுவனம்.
4. தமிழகக் கலைச் செல்வங்கள் - டாக்கடர் துளசி இராமசாமி கவின்கலை அச்சகம். சென்னை

1990

5. தமிழர் இசை – டாக்கர் ஏ.என்.பெருமாள், மெய்ப் பொருள் அச்சகம். சென்னை 1984
6. இசையும் பிற நுண்கலைகளும் - முனைவர் இ.அங்கயற்கண்ணி, முனைவர். இரா.மாதவி, திரு.ந.வி.மு.நவரத்தினம், திருமதி. சீத்தாலெட்சுமி சீனிவாசன், இசைத்துறை தமிழ்ப் பல்கலைக்கழகம்.